நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 16 பிரசோற்பத்தி பங்குனி 09 ( 22 . 03 1992 ) ஞாயிறு


## 5 வருடங்களுக்கு பின்னர் எழுதுவினைஞர் பதவியுயர்வு

யாழ் பொதுமருத்துவமனையில் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக சாதாரண எழுதுவினைஞர்களாக கடமையாற்றி வந்த நால்வருக்கு முதலாம் தர எழுதுவினைஞர் பதவியினை சுகாதார மகளிர் விவகார அமைச்சு அண்மையில் வழங்கியிருக்கிறது க. கந்தசாமி, சி. சிவஞானம், வ. முத்துலிங்கம், ப. பத்மநாதன் ஆகிய நால்வருக்கே சுகாதார அமைச்சு ஐந்தரை வருடங்களுக்குப் பின்னர் பதவியுயர்த்தப்பட்டதற்கான அறிவித்தல் கடிதத்தை அண்மையில் அனுப்பி வைத்திருந்தது 07

# பொலநறுவவில் புலிகள் தாக்குதல்

# ஐந்துபடையினர்பலி!

## ஊர்காவல் படையினருக்கும் இழப்பு

வடக்கில் மணலாறில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கிழக்கிலும் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது,

பொலநறுவ பகுதியில் நேற்று காலை ரோந்து வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்ததில ஐந்து இராணுவத்தினரும் இரு ஊர்காவல்படையினரும் கொல்லப்பட்டனர் மேலும் பலர் காயமடைந்தனர்

சுமார் ஒரு மணி நேரமாக இம் மோதல் இடம்பெற்றதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

பொலநறுவ மாவட்டத்தில உள்ள சிங்கபுர மகாவெலி தென்ன பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன

## ஒட்டுசுட்டானில் நேற்று விமானக் குண்டு வீச்சு

நேற்றுக் காலை 9 மணியளவில் ஒட்டுசுட்டானில் பொம்மர்கள் குடிமனைகளை நோக்கி குண்டுகளை வீசின

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கு அண்மையில் உள்ள சில வீடுகளில் விழுந்து வெடித்ததாக அங் இருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்

ஐந்துக்கு மேற்பட்ட வீடுகளும் சேதப்பட்டுள்ளன சிலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது (07)

## முத்தையன்கட்டில் குண்டு வீச்சு

முத்தையன்கட்டுப் பகுதி மீதும் நேற்று விமானத்தாக்குதல் நடாத்தப்பட்டன,

இதில் சில வீடுகள் சேதமடைந்தன

## பேயாடிக்குளம் பகுதியில் வழிமறித்து தாக்குதல்

வவுனியா பேயாடிக்குளம்பகுதியிலிருந்து முன்னேறியபடையினர் ரோந்து வர முயல்கையில் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

படையினர் காயத்துடன் முகாம் திரும்பியதாகவும் இம் மோதலின்போது புலிகள் போராளி ஒருவர் வீரமரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 07

## மாவீரருக்கு இறுதி அஞ்சலி

மணலாறு மாவட்டத்தில் சென்ற வியாழக்கிழமை இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த வீர வேங்கை இளங்கோ (சித்திரவேல், அசோக்குமார் என்ற போராளியின் புகழுடல் நேற்றுக் கொக்குவிலுள்ள திருகோணமலை தொடர்பகம், கலைமகள் சனசமூக நிலையம் ஆகிய இடத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

இறுதியில் அரியாலை செல்லக்கிளி அம்மான் விடமைப்பு

— 06 ஆம் பக்கம் பார்க்க

## குண்டு வீச்சுத் தாக்குதலால் வடபகுதி மக்கள் பாதிப்பு

வடக்கில் அடிக்கடி திடீரென எதிர்பாராது நடாத்தப்படும் விமானத்தாக்குதல்களால் மக்கள் பாதிக்கப்படுவதாக சிங்கள பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது.

இத்தாக்குதல்களால் அவர்கள் உளரீதியாகவே அதிகமாகப் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஷெல் தாக்குதல்

பூநகரியில் உள்ள கல்முனை காய்தீவில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் கடந்த வாரம் செட்டிய குறிச்சி பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டதால் இப்பகுதியில் உள்ள வீடுகள் பலத்த சேதமடைந்தன. (47)

## நான் இதுவரை எவருக்கும் தீங்கு இழைக்காதவன் - ஜனாதிபதி

நான் இதுவரை எவருக்கும் தீங்கு இழைக்காதவன் என்று ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று ஹுனுப்பிட்டியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்

தொடர்ந்து பேசிய அவர் எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரையை அரசு குழப்பவில்லை

நான் எதிர்க்கட்சியில் இருந்தபோது அத்தனகலையில் சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது அன்றைய சுதந்திரக்கட்சி ஆட்சி என்ன செய்தது என்பதை யாவரும் அறிவார்கள் என்றார்

## இரத்த தானம் செய்தனர்

யாழ் பொது மருத்துவமனை இரத்த வங்கியில மக்கள் பலர் நேற்று இரத்த தானம் செய்தனர்.

இன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு 26 பேர் வரையில இரத்தம் வழங்கியுள்ளனர் 07

## சுதந்திரக்கட்சி எம. பி:-

## சிறுபான்மையினரின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்

வடக்கு கிழக்கு யுத்தம் அர்த்தமற்றது இந்த யுத்தம் பற்றிப் பேசிப்பேசி காலத்தைக் கடத்துவதில் பயன் இல்லை அரசு இதற்கு அவசரமான ஒரு தீர்வைக்காண வேண்டும்,

இவ்வாறு சுதந்திரக்கட்சி கம்பஹா மாவட்ட எம் பி மகிந்த விஜேசேகர திக்குவல்லையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்

தொடர்ந்து பேசிய அவர் யுத்தம் நீடிக்குமானால் நாட்டின் பொருளாதார அழிவுக்கு எல்லையே இருக்காது,

சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் வழங்கப்படவேண்டும் அவர்களின் உணர்வுகளைப்புரிந்து கொண்டு அவர்களின் தேவைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் எந்த ஒரு இனத்துக்கும் விசேட சலுகைகள் வழங்கக்கூடாது என்றார்

## மூன்று வருடங்களில் ஜனாதிபதி தேர்தல்

அடுத்த ஜனாதிபதி தேர்தல் இன்னும் மூன்று வருடங்களின் பின்னரே நடைபெறும் என ஜனாதிபதியின் ஆலோசகர் பிரடமன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்

இவ்வாண்டில் தேர்தல் நடைபெறும் என வெளியான தகவல்களை அவர் மறுத்துள்ளார்.

## மணலாறில்5 ஆவது நாளாக சண்டை தொடர்கிறது

மணலாறுப் பகுதியில் படையினர் முன்னேற்றத்தை தடுத்து விமான ஷெல் பீரங்கித்தாக்குதலுக்கு மத்தியிலும் தளராது நேற்று 5 ஆவது நாளாகவும் உக்கிரத்தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டுவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

நேற்றைய பெரும் தாக்குதலில் படையினர் பெரும் இழப்புகளைச் சந்தித்து வருவதாகவும் கவச வாகனங்கள் சேதமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ஓர் அதிகாரி உட்பட முப்பத்தெட்டு படையினர் இதில் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன 07

## சிலாவத்துறை மாவீரருக்கு நாவற்குழியில் சரணாலயம்

நாவற்குழியில் நேற்று மாலை சிலாவத்துறையில வீரமரணமடைந்த 80க்கு மேற்பட்ட வீரவேங்கைகள் நினைவுகூரும் சரணாலயம் திறந்து வைக்கப்பட்டது

மாவீரர் வணக்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன 07

## வடமராட்சியை நோக்கி நேற்று அரைமணிநேர பீரங்கித்தாக்குதல்

வடமராட்சிப் பகுதியை நோக்கி கடற்படைக்கப்பல்களிலிருந்து நேற்றுக்காலையும் கடும் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று சனிக்கிழமை காலை 5 மணிமுதல் 5, 30 மணி வரை அரைமணிநேரமாக வல்வைக் கடலில் தரித்து நிற்கும் கடற்படைக்கப்பல்களிலிருந்து வல்வை தொண்டைமானாறு பகுதிகளை நோக்கி இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது 09

## பாதயாத்திரை 60 மைல் சென்றுள்ளது

எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரை அறுபது மைல் தூரம் இது வரை சென்றுள்ளது.

அரசசார்பு பத்திரிகைகளைத்தவிர ஏனைய பத்திரிகைகளில் இப் பாதயாத்திரைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது,

ஒலிபெருக்கி, கோஷங்கள் எதுவும் இதுவரை இடம் பெறவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது

## காங்கேசன்துறை களஞ்சியம் புதுவருடத்துக்கு மூடப்படும்

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்துக்கு உணவுப் பொருட்களை ஏற்ற செல்லும் லொறிகள் எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அங்கு செல்ல மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது

இக்களஞ்சியத்தில் பணிபுரியும் சிங்கள தொழிலாளர்கள் புத்தாண்டுக்காக தமது

...06 ஆம் பக்கம் பார்க்க

## மேலதிக சில்லுகளுடன் வரவேண்டாம் என பணிப்பு

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்துக்கு உணவுப் பொருட்களை ஏற்ற செல்லும் லொறிகள் மேலதிக சில்லுகளை பொருத்திவர வேண்டாம் என இராணுவத்தினர் லொறிச் சாரதிகளுக்கு

...06 ஆம் பக்கம் பார்க்க

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை விரைவில் நடாத்த ஏற்பாடு

வடபகுதியில் வெகுவிரைவில் 5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற விருப்பதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சில தினங்களுக்கு முன் கொழும்பு சென்ற யாழ் கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பரீட்சைப் பகுதியினரோடு நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து பரீட்சை ஆணையாளர் அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 06

## சிறு விளம்பரம்

### தேவை

கணக்காய்வு நிறுவனம் ஒன்றிற்கு Peon தேவை 23 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது A. S S (J) Ltd. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. 03044

### தேவை

Audit Traineers

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் வர்த்தகம் ஆகியவற்றில் திறமைச் சித்தி பெற்றோர் விண்ணப்பிக்கலாம். A. S S (J) Ltd 140, பலாலி வீதி திருநெல்வேலி. 03038

### தேவை

கணக்கியல் கணக்காய்வுத்துறையில் அனுபவம் உடையோர் தேவை A. S S. (J) Ltd 140, பலாலி வீதி. திருநெல்வேலி. 03040


# இன்றைய போர்ச் சூழ்நிலையில் மாணவர்களின் பொறுப்புணர்வு

தமிழீழ மாணவர்கள் சிறீலங்கா அரசு விதித்திருக்கும் தடைகளையும், அதனால் ஏற்படும் இடர்களையும் தாண்டி விளையாட்டுத் துறையை வளர்ப்பதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். 'விளையாட்டு' என்பது மனிதனுடைய உடல் வளர்ச்சியையும், உளவளர்ச்சியையும் இணைத்து அவனை ஒழுக்கம், நல்ல பண்புள்ள குடிமகனாக உருவாக்கும் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. அது மட்டுமல்லாது மாணவர்களிடையே ஒற்றுமையும், சகோதரத்துவத்தையும், பண்பாட்டையும் வளர்த்துக் கொள்வதிலும், 'விளையாட்டு' பெரும் பணியாற்றுகின்றது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணலாற்றில் சிறிலங்கா இராணுவம் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு யாழ் குடா நாட்டினை ஆக்கிரமிப்பதற்கான கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தி வரும் இவ்வேளையில் மாணவர்கள் விளையாட்டு என்ற ரீதியில் பொது இடங்களில் கூடி நின்று கும்மாளமடிப்பதும் நிதி சேரிப்பது பண்பாட்டுச் சீரழிவிற்குத் துணைபோகும் வகையில் வேட்டி மீட்டு தெருவில் செல்வதுமான நடவடிக்கையில் ஈடுபட்டு சுதந்திரப் போராட்டத்தையே கொச்சைப்படுத்தி வருகிறார்கள்.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் மாணவர் சமுதாயம் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வார்கள் என நாம் எதிர்பார்ப்பதாகவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## பாடசாலைகளின் அபிவிருத்திபற்றி கோட்டம் தோறும் கூட்டங்கள்

பாடசாலைகளின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ள இடங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது:

பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள், பொருளாளர்கள் தவறாது பின்வரும் திகதிகளில் கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் 23. 03. 92 திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு மருதனாமடக் கோட்டத்தினர் இராமநாதன் கல்லூரி மண்டபத்திற்கும் 24-03-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு வடமராட்சிக் கோட்டத்தினர் வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கும், 25-03-92 புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ் கல்விக்கோட்டத்தினர் யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திற்கும், 26-03-92 வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குத் தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தினர் றிபேக் கல்லூரி மண்டபத்திற்கும், 30-03-92 திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திற்கும் வருகை தரும் வண்ணம் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## வெடிச் சத்தங்களாலும் நாய்கள் பாதிப்பு

யுத்தச் சூழ்நிலையாலும், விமானக் குண்டுவீச்சு, ஷெல் சத்தங்களினாலும் நாய்களுக்கும் மனோநிலை வெகுவாகப் பாதிக்கப்படுவதாககால் நடை வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

அநாதிகளாக இடம் பெயர்ந்தவர்களின் நாய்கள் கட்டாக்காலிகளாக அலைவதால் பெரும் தொல்லை ஏற்படுகின்றதென்றும் ஒரு நாய்க்கு நோய்த்தடுப்பூசி போடுவதற்கு 175 ரூபா செலவாகின்றதென்றும் சுகாதாரப் பகுதியினர் கூறுகின்றனர். 14

## கப்பலில் செல்லும் நோயாளர் ஆஸ்பத்திரியில் பதியவேண்டும்

யாழ் மருத்துவமனையில் வைத்திய நிபுணர்களினால் கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்காக சிபாரிசு செய்யப்பட்ட நோயாளர்களை 23ஆம் 24 ஆம் திகதிகளில் (திங்கள் செவ்வாய்) காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பணிப்பாளர் காரியாலயத்தில் வந்து பதிவு செய்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோயாளர் கட்டாயமாக ஆஸ்பத்திரிக்கு வரவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்களை தவறாது கொண்டு வரும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது இம்மாத இறுதிப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட நோயாளர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர் 40 நோயாளர்கள் வரையில் இவ்வாறு செல்கின்றனர். 07

## இன்று கலைநிகழ்ச்சி

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவின் யாழ் மாவட்டச் செயலகம், கோண்டாவிலில் அமைந்துள்ள மாவீரர் கலையரங்கில் இன்று மாலை 7. 30 மணிக்கு மாதாந்த கலைநிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இக் கலைநிகழ்ச்சியில் விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழக ஆதரவில் உருவான 'போரில் ஒரு நாள்' என்ற நாடகமும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் வழங்கும் 'காலச் சூழலில் மறையாத காலடிச் சுவடுகள்' எனும் கவியரங்கமும் தென்மராட்சிப் பிரிவு கலை பண்பாட்டுக் கழக ஆதரவில் 'மாவீரர் வரிசையிலே' எனும் நாடகமும் நடைபெற இருக்கின்றன.

## சுவாமி விபுலானந்தருக்கு திருமலையில் சிலை

திருமலை நகரில் நிறுவப்பட்ட சுவாமி விபுலானந்தரின் உருவச்சிலை நேற்று திரைநீக்கம் செய்யப்பட்டது.

இன்று ஞாயிறு திருமலையில் சுவாமி விபுலானந்தர் தொடர்பான ஆய்வரங்கு, கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

## காங்கிரஸ் கண்டனம்

கடந்த சில தினங்களாக அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்று வரும் சம்பவங்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டித்துள்ளது.

இரு இனங்களுக்குமிடையேயான உறவை இது மேலும் பாதிக்குமென அது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காயங்களுடன் 3 சடலங்கள்

மட்டக்களப்பு பகுதியில் ஒன்றில் மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாகதகவலொன்று தெரிவிக்கின்றது.

கடந்த வியாழக்கிழமை கண்டெடுக்கப்பட்ட இச்சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

## ஔவைக்கு யாழ்நகரில் விழா

தமிழ் வளர்த்த ஔவைப் பிராட்டிக்கு மக்கள் ஒன்றிணைந்து விழா எடுக்கும் நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக இடம்பெற உள்ளது.

31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கந்தர்மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றலில் அப்பகுதி மக்களால் மிகச் சிறப்பாக இவ்விழா எடுக்கப்பட இருக்கிறது. (07)

## எட்டுப்பேரை 1 நாய் கடித்தது

வலிகிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள நாய்களுக்கு விசர்நாய்க்கடித் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

புத்தூர் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இருவர் விசர் நாய் கடித்து இறந்துள்ளனர் அச்சுவேலிப்பகுதியில் ஒருநாய் எட்டுப்பேருக்குக் கடித்துள்ளது 14


## உற்றார் உறவினர் நண்பர்களுக்கான வடபகுதி தனியார் உணவு விநியோகம்

எமது 20-03-92 திகதியிட்ட பத்திரிகை அறிவித்தல் தொடர்பாக, கீழ்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் விநியோகம் நடைபெறுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம் மிகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பின்பு அறிவிக்கப்படும்.

தயவு செய்து வெற்றுக்கலன்கள், வெற்றுப்பைகள் அடையாள அட்டை அல்லது அத்தாட்சி சான்றிதழ் ஆகியவையுடன். விநியோகத்திற்கான பதிவு விண்ணப்பத்தையும் கொண்டுவரவும்.

அனுப்பிவைக்கப்பட்ட மண்ணெண்ணை கிடைக்காததால் பிறிதொரு திகதியில் விளம்பரப்படுத்தி விநியோகிக்கப்படும்.

| உ. அ. அ. பிரிவு | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1 உடுவில் | பிரதான களஞ்சியம் AIKAYES முத்துகிருஷ்ணர் வீதி (நாகம்மா சினிமா முன் ஒழுங்கை) சுன்னாகம் | 24. 3. 92 | 8. 00 - 5 00 |
| 2 தெல்லிப்பளை | „ | 25 3. 92 | 8. 00 - 5. 00 |
| 3 கோப்பாய் | நாவலர் வித்தியாலயம் முன்பாக நாவலடி. கோப்பாய் | 27. 3. 92 | 8. 00 - 5. 00 |
| 4 சங்கானை | உ. அ அதிபர் பணிமனை முன்பாக பிரதான வீதி சண்டிலிப்பாய் | 29. 3. 92 | 8. 00 - 5 00 |
| 5 சண்டிலிப்பாய் | கிராமசேவையாளர் அலுவலகம் அருகில் மாசியப்பிட்டி | 31. 3. 92 | 8. 00 - 5. 00 |

AIKAYES - Jaffna
முத்துகிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

03048



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கும் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-04-30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன ஏற்றுக்கொள்ளப்படும்.

உயிரிரசாயனவியலில் உதவி விரிவுரையாளர் / விரிவுரையாளர்

குறிப்பு:

உயிரிரசாயனவியலில் / உயிர்தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

சம்பள அளவுத் திட்டம்:

உதவி விரிவுரையாளர்:

ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500 - 10×200-6 500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் 4,500/- சம்பளப் படியில் வைப்பார்.

விரிவுரையாளர் (மருத்துவம்):

ரூபா 4,500-10×200 - 6,500/- மாதமொன்றுக்கு மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4500 ரூபாவுக்கு மேலே இரண்டுபடி அதிகமாக அதாவது 4900/- சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.

இப்பல்கலைக்கழகத்தில் நாயகம் இவையின் சிரேஷ்ட / உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற, 23×10 ச மீ அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அல்லது அனுபவத்தையும் கணித்துக் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் 1992-03-21

03047

நல்லூர் கிளை நூலகம் மாநகர ... மன்றம் யாழ்ப்பாணம்

# ஆசிரிய கலாசாலைகளில் 'தாய்மொழி தமிழ்' பாடநெறியை மீண்டும் ஆரம்பிக்க கல்வி அமைச்சினால் அனுமதி மறுப்பு!

(கிறிஸ்ரி ரஞ்சன்)

ஆசிரிய கலாசாலைகளில் 'தாய்மொழித்தமிழ்' என்ற பாடநெறியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு மறுத்துவிட்டதுடன் அது தொடர்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளைக் கூட கவனத்திலெடுத்து பரிசீலிப்பதற்கும் உடன் படுவதாக இல்லையென்றும் கொழும்பிலிருந்து கிடைத்துள்ள நம்பகமான தகவலொன்று தெரிவிக்கிறது.

'தாய் மொழி தமிழ்' என்ற பாட நெறியும் அதையொத்த 'தாய்மொழி சிங்களம்' என்ற பாட நெறியும் ஆசிரிய கலாசாலை பாடத்திட்டத்திலிருந்து 1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீக்கப்பட்டிருந்தன. ஆனால் 'தாய்மொழி சிங்களம்' என்ற பாட நெறி கலாசாலை பாடத்திட்டத்தில் சில வருடங்களுக்கு முன்னரே மீண்டும் சேர்க்கப்பட்டு விட்டது.

அத்துடன் ஆசிரிய கலாசாலைகளில் தமிழ்மொழி மூல நெறிக்கான பாடத்திட்டம் 1982ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாற்றியமைக்கப்படவில்லையெனவும், வெளிநாடுகளினால் வழங்கப்படும் ஆசிரிய கலாசாலை அதிபர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கலில் தமிழ்ப் பகுதி கலாசாலை அதிபர்கள் புறக்கணிக்கப்படுவதாகவும், கொழும்பிலிருந்து கிடைத்த அந்த செய்தி மூலம் மேலும் அறியப்படுகின்றது.

இவைபற்றி வடபகுதியின் பழமைவாய்ந்த கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் திரு வை. கா. சிவப்பிரகாசம் (எம். ஏ) அவர்களை அலுவலகத்தில் அணுகி விவரம் கேட்டபொழுது பெறப்பட்ட விளக்கங்கள்:

☐ 'தாய்மொழி தமிழ்' பாடநெறியை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது — சாதகமான பதிலை இன்னமும் எதிர்பார்த்திருக்கிறோம்.

☐ தமிழ்மொழிமூல பாடத்திட்டத்தை 1990ஆம் ஆண்டில் மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதாக அறிய முடிந்தது. ஆனால் அது இன்னமும் நடைமுறைக்கு வராமையினால் 1982ஆம் ஆண்டு திருத்தப்பட்ட பாடத்திட்டத்தையே நாம் இப்போதும் பின்பற்றி வருகின்றோம்.

☐ வெளிநாட்டு புலமைப் பரிசிலுக்கு சமீபத்தில் தமிழ் அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டதாக நான் அறியவில்லை என அவர் பதிலிறுத்தார்.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் செயற்பாடு பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் இங்கு தொகுத்துத்தரப்படுகின்றன.

## இந்தியப் படையால் பெரும் சேதம்

இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கட்டிடங்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருந்தது.

## திருத்தத்திற்கு 22 இலட்சம்

இது பற்றி கல்வி அமைச்சுக்கு எடுத்துக் கூறியதையடுத்து இதனைத் திருத்துவதற்கு 1990இல் 22 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

## இன்றுவரை அது கிடைக்கவில்லை

இன்றுவரை அந்த நிதி எமக்குக் கிட்டவில்லை. கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

## பராமரிப்பு நிதி மிகக் குறைவே

கலாசாலையின்பராமரிப்பு, பழுதுபார்த்தல் வேலைகளுக்கென வருடாந்தம் 25 ஆயிரம் ரூபா மட்டுமே எமக்கு வழங்கப்படுகிறது. இது எந்த வகையிலும் போதுமானதாக இல்லை.

## மிகப்பழைமையான கட்டிடங்கள்

கோப்பாய் கலாசாலையின் கட்டிடங்கள் பழமையானவை சில கட்டிடங்கள் 1928ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டவை அதிக அதிர்வை தாங்கக்கூடிய வலுவற்றவையாக அக் கட்டிடங்கள் தற்பொழுது உள்ளன—திட்டமிட்டு அவை வடிவமைக்கப்படவில்லை. கடந்த டிசம்பரில் வீசிய காற்றுக்கு ஒரு கட்டிடத்தின் கூரை பறந்துவிட்டது

## தளபாடங்களும் போதாது

ஆசிரியர்கள் இருந்து படிப்பதற்கு போதிய தளபாடங்களும் இங்கு இல்லை —இருப்பவையும் பழமைவாய்ந்தவை.

கலாசாலையின் பாடநெறிகள்பற்றிக் கேட்டபோழுது-

கோப்பாய் கலாசாலையில் தற்பொழுது ஆரம்பக்கல்வி, மனையியல், இந்துசமயம், நுண்கலை (இசை, நடனம், சித்திரம்) ஆகிய நான்கு துறைகள் உள்ளன.

## இரு துறைகள் இங்கு மட்டுமே

இவற்றில் இந்து சமயம், நுண்கலை ஆகிய இரு துறைகளும் இலங்கையிலுள்ள தமிழ் மொழிமூலமான ஆசிரிய கலாசாலைகளில் கோப்பாயில் மட்டுமே உள்ளன.

கோப்பாய் கலாசாலையில் தமிழ்ப்பகுதிகளைச் சேர்ந்த 380 ஆசிரிய மாணவர்களும், 25 போதனாசிரியர்களும் தற்பொழுதுள்ளனர்.

கலாசாலைப் பாடநெறிகள் விதிமுறைகளில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் பற்றிக் கேட்டதற்கு திரு வை. கா. சிவப்பிரகாசம் தெரிவித்த கருத்துக்கள் இவை:-

★ 10 பாடநெறிகள் அதிகமானது

தற்பொழுது கலாசாலையில் பயிலும் ஆசிரிய மாணவர் ஒருவர் 10 பாடநெறிகளைப் பயில வேண்டியுள்ளது. இது அதிகமானது என்பதே என் கருத்து.

★ மேற்பார்வைக்கும் தகுதி அவசியம்

கற்பித்தல் பயிற்சியை ஆசிரிய மாணவர்கள் மேற்கொள்ளும்பொழுது அந்த பாடநெறிகளைப் போதிக்கும் போதனாசிரியர்களையே அவர்களை மேற்பார்வை செய்ய நியமிக்க வேண்டும். தற்பொழுது பிறநெறிகளைப் போதிப்போரும் அந்த கடமையில் ஈடுபடுத்தப்படுவது தகுந்த பலனைத் தரக்கூடியதல்ல.

★ திறமை ரீதியில் தெரிவு வேண்டும்

ஆசிரிய கலாசாலைகளுக்கான புதிய தெரிவு தற்பொழுது ஆங்கிலத்துறைக்குச் செய்யப்படுவது போல் போட்டிப் பரீட்சை மூலமானதாகவே இருக்க வேண்டும். இதனால் ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவாவோரின் தரத்தைப் பேணக்கூடியதாக இருக்கும்.

★ சம்பள அமைப்பை மாற்ற வேண்டும்

தற்பொழுது பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகள் தொழிலுக்கு நியமிக்கப்படும் அவர்களின் சம்பளத்திட்டம் தயாரிக்கப்படும் பொழுது அவர்கள் பெற்ற பெறுபேறுகளும் (அதாவது சாதாரண பட்டதாரியா, விசேட பட்டதாரியா என்ற விடயம்) கருத்திலெடுக்கப்படுகின்றது. அது போலவே ஆசிரிய கலாசாலைகளில் மாணவர் பெறும் பெறுபேறுகளுக்கமைய பயிற்சியின் பின் அவர்களின் சம்பளத்தில் வித்தியாசமான படிமுறை அதிகரிப்புக்களை ஏற்படுத்தினால் அது அவர்களின் கலாசாலைக் கல்வியை ஊக்குவிப்பதாய் அமையும்,

★ உயர் கல்விக்கு அனுமதி வேண்டும்

அது மட்டுமின்றி ஆசிரிய கலாசாலையில் பயிலும் ஒருவர் ஏககாலத்தில் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவனாகவோ அல்லது பிற உயர் கல்வித்துறையின் வெளிவாரி மாணவனாகவோ இருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

இது படிக்கவேண்டிய காலத்திலேயே படிப்பை மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதாய் அமையும்,

★ விளையாட்டுத் துறைப் பயிற்சி வேண்டும்

தமிழ்மொழி மூலமான ஆசிரியர்கள் விளையாட்டுத் துறைப் பயிற்சியை வடக்குக் கிழக்கிலுள்ள ஆசிரிய கலாசாலைகளில் தற்பொழுது பெற வசதி இடையாது,

இக்குறையைப் போக்க வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள ஏதாவதொரு கலாசாலையில் விளையாட்டுத் துறைப்பயிற்சி நெறியை ஆரம்பிக்க வேண்டும்.

---

## பாடுமீன் வெற்றி பெற்றது

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை குருநகர் பாடுமீன் அணி 1;0 கோல் கணக்கில் வென்றது.

நடுவராக ஜீ. டீ. ம், செபஸ்தியாம்பிள்ளை கடமையாற்றினார், (16)

## இன்று பேச்சுப்போட்டி

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் அதன் அங்கத்துவ ச.ச. நிலையங்களுக்கிடையே நடாத்தும் பேச்சுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுவோருக்குரிய அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ள போதும் விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைக்காதவர்களும் இப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர் என்று சம்மேளனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது 25

## செஞ்சிலுவை வழங்கியது

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து அராலி பகுதியில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு யாழ் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினர் அன்பளிப்பாக உடுபுடவைப் பார்சல்களை வழங்கியுள்ளனர். (47)

---

## தொல்லை தரும் தொய்வுநோய் விரைவில் முற்றாகவே ஒழியும்!

பிரித்தானியாவைச் சேர்ந்த வைத்தியர்கள் தொய்வுநோய் சிகிச்சைக்கு நல்ல பயன் தரக்கூடிய உயிர்ம இணையத்தை (GENE) கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மருந்து பாவனைக்கு வந்ததும் தொய்வு நோய் முற்றாகவே இல்லாது ஒழிந்துவிடும் எனவும் இன்னும் ஒரிரு வருடங்களில் இந்த மருந்து பாவனைக்கு வர உள்ளதாகவும் லண்டன் சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (15)

## புதிய ஒருரூபா நாணயம் நாளை முதல் புழக்கத்தில்

புதிதாக வெளியிடப்பட்ட ஒரு ரூபா நாணயமும், 10 ரூபாத் தாளும் யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிகளுக்குத் தற்பொழுது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன,

புதிய ஒரு ரூபா நாணயத்தில் ஒருபக்கம் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் உருவமும், மறுபக்கத்தில் அசோகச் சக்கரமும், அதனைச் சுற்றி அரச இலைகளும் பொறிக்கப்பட்டுள்ளன

புதிய 10 ரூபா நோட்டின் அளவு மிகவும் சிறியதாய் உள்ளது, இப்பட்டதட்ட தற்பொழுது புழக்கத்தில் உள்ள ஒருரூபாய் நோட்டளவு நீள அகலத்தைக் கொண்டதாய் உள்ளது.

நாளை திங்கட்கிழமை ஒரு ரூபா நாணயங்கள் யாழ் இலங்கை வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதென்றும், புதிய 10 ரூபா நோட்டு சித்திரை வருடப் பிறப்பை ஒட்டியே புழக்கத்திற்கு விடப்படும் என்றும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன, (16)

## கல்வி அலுவலகத்தின் முன் மறியல செய்ய முடிவு!

யாழ். மாவட்டத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் இம்மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ் கல்வித்திணைக்களம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை செய்ய உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

தமக்கு இதுவரை நிரந்தர நியமனம் இடைக்காததைக் கண்டித்தே இவர்கள் மறியற் போராட்டம் நடாத்தி யாழ் கல்வித் திணைக்களத்தில் கல்விப் பணி பாளரிடம் மகஜர் ஒன்றையும் அன்றைய தினம் கையளிக்க உள்ளனர். (15)

## ஐ.நா.யுத்த பிரேரணைக்கு ஈராக் ஒத்துழைக்குமென அறிவிப்பு

இரசாயன ஏவுகணை உபகரணங்களை அழிப்பதற்கும் அதன் இராணுவத் திட்டங்களை தெரிவிப்பதற்கும் ஈராக் முன்வந்துள்ளது

இது தொடர்பான அறிவித்தலை ஈராக் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு அனுப்பி வைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மறைத்துவைக்கப்பட்டுள்ள இராணுவ தளபாடங்களை வெளிப்படுத்தவும் காணாமற் போனதாகக் கூறப்பட்ட இராணுவ உபகரணங்களைக் கண்டுபிடிக்கவும் ஐ நா.வுக்கு உதவப் போவதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

## கொழும்பில் ஒப்படைக்கப்பட்டவை இவ்வாரம் கையளிக்கப்படும்

வடபகுதியிலுள்ள உற்றார், உறவினர், நண்பர்களுக்கெனக் கொழும்பிலுள்ளோரால் ஐகேஸ்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்கள் அடுத்த சில தினங்களில் முகவரியாளர்களிடம் மேற்படி நிறுவன யாழ் கிளையினரால் கையளிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒரு மையத்தில் வைத்து இவை விநியோகிக்கப்படும்,

கடந்த 31-12-91 அன்று கொழும்பிலிருந்து கப்பலில் அனுப்பப்பட்ட இப் பொருள்கள் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

பின்னர் இப் பொருள்கள் 'மெரினாஸ்' என்ற கப்பலில் ஏற்றப்பட்டுப் பருத்தித்துறையில் இறக்கப்பட்டுத் தற்பொழுது 'ஐகேஸ்' நிறுவன யாழ். பிரதிநிதிகளின் பொறுப்பில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

## இராணுவத்தகவல்களைப்பரிமாற அமெ-ரஷ்யா புதிய ஒப்பந்தம்

ரஷ்யாவும்- அமெரிக்காவும் மற்றும் ஐரோப்பிய ஒத்துழைப்பு பந்தோபஸ்து அமைப்பின் 24 நாடுகளும் திறந்த வான்வெளி ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ள இணங்கியுள்ளன

இந்தஒப்பந்தத்தின்கீழ் இந் நாடுகள் ஒன்று மற்றதன் வான் பகுதியில் வேவு விமானங்கள் பறப்பதற்கு அனுமதியளிக்கும்.

மேலும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய தகவல்களையும் இந்த நாடுகள் பகிர்ந்து கொள்ளும்,

செவ்வாய்க்கிழமை கையெழுத்தாகவுள்ள இந்த ஒப்பந்தம் 1993 முதல் அமுலுக்கு வரும்.

# இவ்வார இராசிபலன்

(22 - 03 - 92 — 28 - 03 - 92)

மேடம்:- உங்களுக்குத் தொழில் ஸ்தானத்தில் பதட்ட நிலை ஏற்படும் எதிர்பாராத செலவுகளால் மனக் கலக்கம் ஏற்படும். இருப்பினும் பணவரவும் ஏற்படச் செய்யும். செல்வாக்கிலும் குறைவிருக்காது. சகோதரங்களால் பொருட் செலவும், சத்துருக்களால் மறைமுக எதிர்ப்புக்களும் இருக்கும். 24, 25, 26 ஆம் திகதிகளில் அவதானமாக இருங்கள். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்.

இடபம்:- நீங்கள் அவசியமற்ற பிரயாணங்களைத் தவிருங்கள் வீணாகப்பொறுப்புக்களை ஏற்றுக் கஷ்டப்படாதீர்கள், உறவினர்களும் வீண்பழி சொல்வார்கள். அடிக்கடி கோபம் வரும், பொறுமையாக இருக்க முயலுங்கள். புதிய திட்டங்கள் தொழில் ஸ்தானத்தில் உருவாகும் பயமும், கடனும் தொடரும், பெண்கள் உதவி செய்வர். 25, 26, 27 ஆம் திகதிகளில் பாதிப்புகள் வரலாம் அவதானமாக இருக்கவும்.

**நல்லூர் சோதிடர்**
**இ.மகாதேவா**

மிதுனம்:- நீங்கள் பேசிப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். பிரயாணத்தால் கஷ்டமும், உறவினர்களால் நஷ்டமும் அடைவீர்கள் எதிர்பாளர் பல உதவிகள் செய்வர். நண்பர்கள் உதவிக்கு வருவர். உறவினரின் சுபகாரியங்களுக்காக உதவிகள் செய்வீர்கள். அதிக அலைச்சல் பலவீனம் கொடுக்கும் ஆலயவழிபாடு வேதனையைக் குறைக்கும்

கடகம்:- நீங்கள் எடுத்ததிற்கெல்லாம் கோபிப்பீர்கள். அடிக்கடி அலைச்சலும் களைப்பும் கொடுக்கும். எதிரிகள் தொல்லை கொடுப்பார்கள் சமாளித்துக் கொள்ளுவீர்கள். சகோதரர்களின் திருமண விஷயமாக, சுபகாரியத்திற்காக அலுவல்கள் பார்ப்பீர்கள், புதிய நண்பர்கள் உதவுவார்கள் பணவரவு கொடுக்கும், சிலசமயம் பயம், பதட்டம், காயம் ஏற்படும், தெய்வ வழிபாட்டால் தவிர்த்துக் கொள்ளலாம்

சிங்கம்:- நீங்கள் கலகலப்பாக இருப்பீர்கள். இடைக்கிடை குடும்பத்தில் வாக்குவாதம் இருக்கும், தொழில் ஸ்தானத்தில் அதிக வேலைகளால் உடல்பாதிப்புஏற்படும். நண்பர்களால் நஷ்டமும், காரியத் தடையும் கொடுக்கும். வயிறு, கண்களில் சிலருக்குப் பாதிப்புவரலாம். ஆயினும் வைத்தியத்தால் குறையும். பண விஷயத்தில் கவனமாக இருந்தால் தப்பிக்கொள்வீர்கள் புதிய திட்டங்களால் உங்களுக்குப் புகழ் ஏற்படும்.

கன்னி:- உங்களுக்குப் பல காரியங்கள் கைகூடும் ஆனால் வீட்டாரின் செலவுகளால் கடன்பட்டுச் சமாளிப்பீர்கள். பிரயாணத்தால் நஷ்டம் ஏற்பட்டாலும் பழைய பணவரவு கொடுக்கும் அறிகுறி தென்படும். இடையே இடமாற்றமும் விஷபயமும் ஏற்படும் காயங்கள் ஏற்படலாம். அவதானமாகப் போய்வருவதுடன், ஆலயவழிபாடு ஆறுதல்களைத் தரும் எனவே உங்களை எதிரிகள் ஒன்றும் செய்ய முடியாது.

துலாம்:- உங்களுக்குத் தொழிற் சிறப்பும், உறவினர்களால் மனக் கலக்கமும் ஏற்படும். சகோதரர்களுக்காக அல்லது புத்திரர்களுக்காக அதிக பிரயாசை படுவீர்கள். பொருள் வரவும், வீண் அவமானங்களும் தேடிவரும் தூரதேசச் செய்திகளால் ஆறுதல் உண்டு. பொறுப்பு நிற்காதீர்கள் அதனால் வீண்பழிவரும், தொழில் ஸ்தானத்தில் புதிய மாற்றங்கள் உங்களுக்குக் காத்திருக்கின்றன.

விருச்சிகம்:- நீங்கள் போராடிப் போராடிக் காரியங்களைச் சாதித்துக் கொள்ள இடமுண்டு வீணான யோசனைகளை விடுங்கள் வெற்றி உங்களுக்கே வரும், உறவினர்கள் உற்சாகம் தந்து உதவுவார்கள் வயிறு, கண் முதலிய இடங்களில் கிருமிகளால் தாக்கம் கொடுத்து செலவுகளை அதிகரிக்கும். பொருள்கள் களவுபோகும் தொழில் ஸ்தானத்தில் சிலருக்குப் பயப்படுவீர்கள், தொல்லை தருபவர்களை அறிந்து செயற்படுங்கள், வெற்றி உங்களை நாடி வரும்.

தனு:- உங்களுக்குத் தொழில் ஸ்தானத்தில் மாற்றமும், நன்மைகளும் ஏற்படும். ஆனால் நீங்கள் எதைச் செய்தாலும் வீண்பொழுதாகவே இருக்கும், அயலவர்களுடனும், இனஜனங்களுடனும் அவதானமாக இருங்கள். நண்பர்கள் உதவுவார்கள். குடும்பத்தில் அபிப்பிராய பேதம் ஏற்படும். அடிக்கடி களைப்பும், பொருள் இழப்பையும் காட்டுவதால் மிக அவதானமாகக் குலதெய்வத்தை வேண்டுதல் செய்யுங்கள்,

மகரம்:- உங்கள் முயற்சிகளால் வெற்றிக்கு மேல் வெற்றி வரும். சகோதரங்களின் சுபகாரியங்களுக்காகப் போராடி கோபத்தால் சிலரைப் பகைத்துக் கொள்வீர்கள், ஏமாற்றங்களும் ஏற்படாமல் இராது. அடிக்கடி சச்சரவும், மனப்பயமும், எதிரிகளால் தொல்லைகள் இருந்தாலும் பெரியவர்களால் உதவிகள் கிடைக்கும் மந்தப் பலனும், அவமானங்களும் ஏற்படும் அதிக செலவுகள் கொடுக்கும், ஆலய தரிசனம் சிறப்பைத் தரும்.

கும்பம்:- உங்களுக்கு அலைச்சலும், ஏமாற்றமும் வருகிறதென கவலைப்படாதீர்கள். தூரதேசத்திலிருந்து நற்செய்தியும், சிலருக்குப் பணவரவும் ஏற்படும், நன்மை,தீமை மாறி மாறி வரும், கௌரவக் குறைவு எனத்தயங்காதீர்கள். தைரியமாக வரும் பணத்தைச் செலவு செய்து கலகலப்பாக இருக்கப் பாருங்கள். வீட்டிலும் இனஜனங்களின் கொண்டாட்டங்களிலும் கலந்து கொண்டு உற்சாகமாக இருங்கள், தலையிடிக்கு மருந்து தேடுங்கள்,

மீனம்; உங்களுக்குப் பக்கத்தில் இருப்பவர்களுடன் அவதானமாக இருங்கள், காத்திருந்த பணம் வராது. கை, காலில் காயம் வராமல் இராது வெற்றி தோல்வியைச் சமப்படுத்திக் கொள்ளுங்கள், பகைவரால் அவமானமும், பொருட்களவு, இனஜன விரோதம், வீண் பழி இதனால் மனக்குழப்பமும், அலைச்சலும் கொடுக்கும், தெய்வீகச்சக்தி உங்கள் பக்கத்தில் இருக்கப் பயத்தை விட்டுக் காரியத்தில் இறங்கிச் செயற்படுங்கள் வெற்றிவரும்.

## மிக உயரிய 'பாரத ரத்னா' விருது சத்தியஜித் ரேக்கு கிடைக்கிறது

இந்தியாவின் மிக உயரிய விருதான 'பாரதரத்னா' பிரபல இந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சத்தியஜித் ரேக்கு வழங்கப்பட்டுள்ளது

கல்கத்தா மருத்துவமனையில் சத்தியஜித்ரே தற்பொழுது சிகிச்சை பெற்று வருகிறார்,

உலகின் மிகச்சிறந்த 10 திரைப்படத் தயாரிப்பாளர்களில் ஒருவராகக் கருதப்படும் இவர் 1984 இல் மற்றொரு விருதினையும்பெற்றிருந்தார்.

இவரின் திரைப்பட சாதனைகளுக்காக சில தினங்களுக்கு முன்னர் சிறப்பு ஆஸ்கார் விருது வழங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நுகர்வோரின் புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை

நல்லூர் பிரதேச வர்த்தக சங்கத்தின் பணிமனை திருநெல்வேலிச்சந்தி, பலாலி வீதியில் உள்ள மாடிக்கட்டடத்தின் மூன்றாவது மாடியில் திறந்துவைக்கப்பட்டது.

பொதுமக்கள்,வர்த்தகர்கள் பாவனையாளர்கள் ஆகியோர் வர்த்தகம் சம்பந்தமான தமது குறைபாடுகள் தேவைகள். முறைப்பாடுகள், கருத்துக்கள்போன்றவிபரங்களைத் தெரிவிப்பதற்காக பதிவேடு ஒன்றும் இந்தப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளது. பதிவேட்டில் பதியப்படும் புகார்கள், ஆலோசனைகள் குறித்து உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 41

## வாராந்தக் கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக்கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை 22-ம் திகதி காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை. பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இவ்வார அமர்வில் திரு. டானியல் அன்ரனி அவர்கள்" எனது கலை இலக்கிய அனுபவங்கள்" என்றபொருளில் கருத்துரையாற்றுவார்

## செஞ்சிலுவைச் சங்கக் கூட்டம்

வலி-வடக்குப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு மல்லாகம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

## 'எம் மக்கள் சுதந்திரமாக வாழ தன்னுயிர் நீத்தவர் அன்னை'

சங்கானைப் பனிப்புலம் அம்மன் கோவிலடியில், அன்னை பூபதியின் நினைவுதினக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது

ம. உ. கொ. மு. பிரிவுப்பிரதிப் பொறுப்பாளர் கவிஞர் வாஞ்சிநாதன், திரு இளையவன்' மகளிர் பிரிவைச் சேர்ந்த மதிவாணி ஆகியோர் அங்கு உரையாற்றினார்கள்.

கவிஞர் வாஞ்சிநாதன் தமது உரையில் அன்னை பூபதி முன்வைத்த இரண்டு கோரிக்கைகளையும் குறிப்பிட்டு அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால் தனது இன்னுயிரையே அர்ப்பணித்தார் தமிழீழத்திலே வாழ்கின்ற மக்கள் அடிபட்டு உதைபட்டு, அழிந்து போகாமல் எதிர்காலத்திலாவது சுதந்திரமாக வாழவேண்டுமென்பதற்காகவே தன் இன்னுயிரை நீத்தார் கட்டைக்காட்டிலே ஆனையிறவிலே குப்பிளானிலே இன்று ஏகாதிபத்திய இராணுவத்தை எதிர்த்து நிற்கும்பிஞ்சுகளுக்கு உத்வேகமும் உயிரூட்டமும் கொடுத்தவர் அன்னை பூபதியேயாவார் இந்த நாடு விடுதலை பெறவேண்டுமாயின் ஆயிரக்கணக்கான அன்னை பூபதிகள் இந்த மண்ணிலே உருவாகவேண்டும் என்றும் குறிப்பிட்டார்,

காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட, உண்ணா நோன்பும் இடம்பெற்றது. கூட்டத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன,

## முத்தமிழ் விழா மலருக்கு படைப்புக்கள் சேகரிக்கப்படுகிறது

தமிழீழத்தின் பல பாகங்களிலும் நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவை (1992) யொட்டி வெளியிடப்படவிருக்கும் முத்தமிழ் விழா மலருக்கான ஆக்கங்களும், கட்டுரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன,

கட்டுரைகள் தமிழீழத் தேசியப் பாரம்பரியங்களை அடியொற்றியனவாக அமைதல் வேண்டும்.

ஈழத்துக் கலை, இலக்கிய வரலாற்றில் சிறுகதை, நாவல், உரைநடை மற்றும் கவிதை முதலியன பற்றிய தனித்தனி ஆக்கங்கள் தமிழீழத்தின் சமூகவியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் தமிழீழத்தின் இசைப் பாரம்பரியம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் தமிழீழத்தின் அவைக்காற்றுக் கலைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், கிராமியக்கலைகள் - தமிழீழத்தின் வாழ்க்கையோடு இணைந்துள்ளமை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், தமிழீழத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றிய கட்டுரைகள், நவீன தொழில் நுட்ப அறிமுகங்களால் ஏற்பட்ட மாற்றங்கள், மற்றும் சிறுகதை, கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

01. 04. 1992க்கு முன்னர் நேரிலோ, கடிதமூலமோ கலை, பண்பாட்டுக்கழகத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுப்ப வேண்டியமுகவரி:- மலர்க்குழு, முத்தமிழ் விழாச் செயலகம் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம், தலைமைச் செயலகம், கோண்டாவில்.

## எதிரணி பாதயாத்திரையில் பங்குபற்றுவோர் தொகை குறைகிறது

எதிரணியினரால் தெற்கில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும்பாதயாத்திரையில் பங்குபற்றும்மக்களின்தொகை வெகுவாகக்குறைவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்தப் பாதயாத்திரையை ஒழுங்கு செய்த எதிரணித்தலைவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாக நேற்று வெளியான ஏரிக் கரைப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

## நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி 30ஆம் திகதிவரை தொடரும்

வீட்டில் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் வராமல் தடுக்கும் பொருட்டு தடுப்பூசி மருந்து போடும் பணிகள் யாழ். மாநகரசபைப் பகுதிகளில் கடந்த 17 ஆம் திகதியிலிருந்து நடைபெற்று வருகின்றன.

அறிவுறுத்தப்பட்டுள்ள சனசமூக நிலையங்களில் நாய் வளர்ப்போர்கள் தடுப்பூசி மருந்துகளைப் போட்டுக் கொள்ள முடியும்

காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை ஊசி மருந்து போடப்பட்டு வருகிறது. வெப்பநிலை அதிகரித்துள்ளதால் நாய் வளர்ப்போர்கள் தவறாது ஊசி மருந்தினை நாய்களுக்கு போடுவித்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டு தடுப்பூசி பணி 30ஆம் திகதிவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (07)

## மாரடைப்பு நோயைக் குணமாக்க ஆட்டுப்பால் சிறந்ததென சிபார்சு

இந்திய விஞ்ஞானிகள் ஆட்டுப்பாலில் இருந்து வியக்கத்தக்க கண்டுபிடிப்பு ஒன்றைச் செய்துள்ளார்கள். இதன் மூலம் மாரடைப்பு நோய் ஏற்படுவதற்கு காரணமாக உள்ள இரத்தக் கட்டிகளை நீக்க முடியும் என இவர்கள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

ஆட்டுப்பாலில் உள்ள உயிர்ம இணையத்தின் (GENE) மூலம் மாரடைப்பை உருவாக்கும் இரத்தக் கட்டிகளை நீக்கலாம். இந்த உயிர்ம இணையம் இரத்தக் கட்டிகளை கரைக்கக்கூடியது.

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட பாகிஸ்தானிய விஞ்ஞானி ஆட்டுப்பால் இரத்தத்தில் ஏற்படும் கட்டிகளை கரைக்கக்கூடிய சக்திவாய்ந்தது எனக் கூறியுள்ளார்.

இது விடயமாக கருத்துத் தெரிவித்த அமெரிக்க விஞ்ஞானி இக்கருத்தை ஊர்ஜிதம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

★ இரிக்கெட் போட்டி

# சென்றல் சென்ஜோன்ஸ் வெற்றிதோல்வியின்றி முடிவு

யாழ் மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 88 ஆவது கிரிக்கெட் போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அதன் முதல் இனிங்சில் 344 ஓட்டங்களைக் குவித்து சரித்திரம் படைத்து ஆட்டம் இழந்தது.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் அணி அதன் முதல் இனிங்சில் 226 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ஸ்கோர் விவரம் - பீஸமர் 4 துரைராசா 27 அஜித் குமார் 11 பிரி - இறேசன் 18 சாண்டியன் 76 யேகதாஸ 03 ஜே மதியாளன் 05 பிரதீபன் 38 ஜீ சிறிதரன் 18 ஜே ஜீபிரதீபன் 4, சஞ்சீவ் 5 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் 34 34 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கற்றுக்களையும். கே. பிரபாகரன் 83 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கற்றுக்களையும் கைப்பற்றினர்.

மீண்டும் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட சென்ஜோன்ஸ் அணியினர் 7 விக்கற்றுகள் இழப்பிற்கு 133 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டம் நிறைவு பெற்றது (16,15)

★ இம்முறை பலத்த போட்டி

# செஞ்சிலுவைச் சங்கத் தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் முடிவு

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை புதுவருட நிர்வாகிகள் தெரிவு தேர்தலுக்கு இம்முறை பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது.

தலைவர் பதவிக்கு தற்போதைய தலைவர் எம்.என் நாச்சினார்க்கினியனும் இம்முறையும் போட்டியிட வேட்பு மனுதாக்கல் செய்துள்ளார்.

இவரைஎதிர்த்து கோப்பாய், தெற்கைச் சேர்ந்த டாக்டர் வ. தியாகராசாவும் யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த டாக்டர் எம். ஜெகதாசனும், யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த எஸ் இராமநாதன் ஆகியோரும் தலைவர் பதவிக்கு போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

செயலாளர் பதவிக்கு ச. சிவானந்தராசா மீண்டும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார், இவரை எதிர்த்து யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கு. பாலகிருஷ்ணனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இ. எழில். ந. சபேசன், த. கோகுலன் ஆகிய நான்கு பேர் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

உபதலைவர் பதவிக்கு தற்போதைய உபதலைவர் எம். இராஜேந்திரவும் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளார் இவரை எதிர்த்து பேராசிரியர் எஸ். கணேசலிங்கம், எஸ். கந்தவேள், நகுலராஜனும் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

மற்றும் ஐந்து செயற்குழு உறுப்பினர் பதவிக்கு 24 பேர் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்

இத்தேர்தலில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 பிரதிநிதிகள் கலந்து கொண்டு வாக்களிக்க உள்ளனர். 19,06

★ தமிழ் மொழி அமுலாக்கல்

# அரசின் சுற்று நிருபத்தால் தமிழர் ஓய்வு பெறமுடியாத நிலை

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சு தனது தமிழ் மொழி அமுலாக்கல் சுற்று நிருபத்தில் தடுமாற்றம் அடைந்துள்ளது

இந்த சுற்றுநிருபத்தின்படி சிங்களம் சித்தியடையாமையினால் பதவி நிரந்தரமாகப்படாமலும்சம்பள உயர்ச்சி தடைப்பட்டும் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிங்களமொழியில சித்திடையத்தேவையில்லையென்றும் பதவி நிரந்தரம் சம்பள உயர்ச்சிகள் தடையின்றி வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது

இச்சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச திணைக்களங்களில சிங்களச்சட்டத்தால பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்குப் பதவி நிரந்தரம் உறுதிப் படுத்தப்பட்டுச் சம்பள உயர்ச்சிகளும்வழங்கப்பட்டன

ஆனால தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில கடமையாற்றி ஓய்வு பெற்ற சில ஊழியர்கள் சிங்களம் வாய்மொழி மூலப்பரீட்சை சித்தியடையாததால பதவி நிரந்தரம் உறுதிப்படுத்த முடியாது என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது

இதனையடுத்துத் தேசிய வீடமைப்புத் திணைக்கள உதவி ஆணையாளர் 1989-ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் தமிழ் உத்தியோகத்தர்களுக்குச் சிங்கள தகைமையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதால அச்சுற்று நிருபத்தின் பிரகாரம் பதவி நிரந்தரத்தை உறுதிப்படுத்துமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினைக் கோரியுள்ளார்

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் எந்த நிலைப்பாட்டின் தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினால ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இரண்டரை வருட காலமாகப் பென்ஷன் பெற முடியாது அவல நிலையிலுள்ளனர், 14

## உலகக் கிண்ண கிரிக்கெட்: 'முரசொலி' வினாவிடை போட்டி

தற்பொழுது நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்பாக வாசகர்களுக்கான போட்டியொன்றை நடத்த முரசொலி முன்வந்துள்ளது.

கீழே தரப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்களும் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

போட்டிக்கான வினாக்கள் இவைதான்:—

(1) ஐந்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் முதலாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(2) இரண்டாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(3) இத் தொடரில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(4) இறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(5) முதலாவது உலகக் கிண்ணப் போட்டி
(அ) எங்கு நடைபெற்றது?
(ஆ) எப்பொழுது நடைபெற்றது?

* இம் போட்டியில் முரசொலியில் கடமையாற்றுபவர்களைத் தவிர்ந்த எவரும் பங்குபற்றலாம்
★ விடைகள் யாவும் முரசொலியில் பிரசுரமாகும் படிவங்களிலேயே அனுப்பப்படவேண்டும்,
★ ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் கீழ்வரும் படிவத்தில் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு:- | ரூபா. | 250 |
| இரண்டாம் ,, | ,, | 150 |
| மூன்றாம் ,, | ,, | 100 |

விடைகள் இம்மாதம் 23 ஆம் திகதிக்கு பிந்தாமல் முரசொலிக்கு நேர்முகமாகவோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையில் "உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி" எனக் குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:- சரியான விடைகள் பல கிடைக்குமிடத்து குலுக்கல் முறையில் பரிசில்கள் தீர்மானிக்கப்படும்.

### உலகக் கிண்ண கிரிக்கெட் முரசொலி வினாவிடைப் போட்டி

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................

மாணவராயின்
பாடசாலையின் பெயர். ..................................
விளையாட்டுக் கழக அங்கத்தவராயின்
கழகப் பெயர்; ..................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

★ கிரிக்கெட் போட்டியில்

# பற்றிக்ஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி தோல்வியின்றி முடிவு

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்பத்திரிக்ஸ கல்லூரிக்கும் இடையிலான 75 ஆவது போட்டி நேற்றும் நேற்று முன்தினமும் சென்பற்றிக்ஸ கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பொழுது வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ கல்லூரி அதன் முதல் இனிங்ஸ துடுப்பாட்டத்தில் அஜந்த் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்த 95 ஓட்டங்கள் உட்பட 226 ஓட்டங்களைப் பெற்றது

யாழ்ப்பாணக் கல்லூரி அதன் துடுப்பாட்டத்தில் முதல் இனிங்ஸில் சகல விக்கற்றுகளையும் இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. வீரசுதன் 43 ஓட்டங்களையும் நிசால் 43 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்

சென்பற்றிக்ஸ கலலூரி அதன் இரண்டாவது இனிங்ஸ துடுப்பாட்டத்தில 5 விக்கற்றுகள் இழப்பிற்கு 43 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது

யாழ்ப்பாணக் கலலூரி இரண்டாவது இனிங்சில் ஒரு விக்கற் இழப்பிற்கு 26 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில ஆட்டம் நிறைவு பெற்றது 16

சுகாதார அமைச்சர் சொல்கிறார்

# அரச ஆஸ்பத்திரிகளில் வைத்திய நிபுணர் குறைவு

இந்நாட்டில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு 1, 350 வைத்திய நிபுணர்கள் தேவைப்படுகின்றனர் ஆனால் 350 பேரே தற்போது உள்ளனர்

இவ்வாறு சுகாதார அமைச்சர் திருமதி ரேனுகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

தெற்கில் ஆஸ்பத்திரி ஒன்றைத்திறந்து வைத்துப் பேசிய அவர் பல வைத்தியர்கள் வெளிநாடுகளில் பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர்

ஆனால் அவர்கள் நாடு திரும்பாமல் அங்கேயே தங்கி விடுகின்றனர் ஒரு நிபுணரை பயிற்றுவிக்க 5 லட்சம் ரூபா செலவாகிறது என்றார்

மாவீரருக்கு...

திட்டத்திலும் வைக்கப்பட்ட பின்னர் புகழுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது

காங்கேசன்துறை..

சொந்த இடங்களுக்கு செல்ல இருப்பதால் காங்கேசன்துறை களஞ்சியம் பாவனைக்காக மூடப்பட்டிருக்கும் எனவும் தெரியவருகிறது 47

மேலதிக...

பணித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

மேலதிக சில்லுகளை லொறிக்கு அடியில் பொருத்திவரும் லொறிகளை இராணுவத்தினரின் கீரிமலை சென்றிக்கு அப்பால் சில்லுகளை கழட்டி வைத்த பின்னரே லொறிகள் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது 47

# உலகக் கிண்ண கிரிக்கெட் பாகிஸ்தான் வெற்றிபெற்றது

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் எதிர்பாராத முடிவுகளுக்கும், திருப்பங்களுக்கும் பேர்பெற்றவைகளாகும் இதற்கு கண்கண்ட எடுத்துக்காட்டாக நேற்று உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரின் அரை இறுதி ஆட்டத்தில் முதலாம் இடத்தில் நின்ற நியூஸிலாந்து அணியை மூன்றாம் இடத்தில் நின்ற பாகிஸ்தான் அணி தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வாட்டத்தில் வெற்றி பெறுவதற்கு 5,26 ஓட்டங்களைப் பெறவேண்டிய கடினமான நிலையில் தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி ஒரு சந்தர்ப்பத்தில் 8 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலை இருந்தது

என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று எல்லோரும் அங்கலாய்த்துக் கொண்டிருந்த வேளையில் பாகிஸ்தான் அணி வீரன் மொயின் கான் ஒரு சிக்சரையும், அதைத் தொடர்ந்து ஒரு பவுண்டரியையும் அடித்து (48:4 ஓவர்களில்) தனது அணியின் ஓட்ட எண்ணிக்கையை 264 ஆக ஆக்கி வெற்றிபெறச் செய்தார்.

இவ் வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி எதிர்வரும் 25 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள 25 ஆவது உலகக் கிண்ணப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றுள்ளது. (16)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில்
22-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது